தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழகம், புதுச்சேரியில் இன்று மழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

தமிழகம், புதுச்சேரியில் வெள்ளிக்கிழமை ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் கூடிய, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக தருமபுரி மாவட்டம் மாரந்தஹள்ளியில் 90 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. சேலம் மாவட்டம் ஆத்தூர், திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் தலா 60 மி.மீ, பென்னாகரம், திண்டுக்கல் மாவட்டம் காமாட்சிபுரம் ஆகிய இடங்களில் தலா 50 மி.மீ, மதுரை மாவட்டம் மேட்டுப்பட்டி, திருமங்கலம், கடலூர் மாவட்டம் தொழுதூர், திண்டுக்கல், பழனி ஆகிய இடங்களில் தலா 40 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. முன்னறிவிப்பு: வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த குறைந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதியானது, மத்திய மேற்கு வங்கக் கடல், வடக்கு ஆந்திரம், தெற்கு ஒடிசாவை ஒட்டியப் பகுதிக்கு நகர்ந்துள்ளது.இதனால் தமிழகத்தில் அடுத்து வரும் நாள்களில் மழையின் அளவு படிப்படியாகக் குறையும்.

## தமிழக வேளாண் பல்கலை: ஜன.,6-இல் சிறு தானிய உணவு தயாரிப்பு பயிற்சி



தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தகவல், பயிற்சி மையத்தில் சிறு தானிய உணவு தயாரிப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி ஜனவரி 6-ஆம் தேதி நடைபெறுகிறது. காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை இந்தப்

பயிற்சி வகுப்பு நடைபெறும். ஆர்வமுள்ள அனைவரும் இந்தப் பயிற்சியில் சேரலாம். இதில் பயிற்சி பற்றிய குறிப்பேடு, கையேடு, மதிய உணவு, சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம், யூ-30., 10-வது தெரு, அண்ணாநகர் (ஜெயகோபால் கரோடியா பள்ளி அருகில்), சென்னை-40. என்ற முகவரியிலோ, 044-26263484 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

## <u>செண்டுமல்லி பயிரிட்டால் அதிக லாபம்..!</u>



நடப்பு பருவத்துக்கு ஏற்றபடி, துல்லியத் தொழில்நுட்பச் சாகுபடி திட்டத்தில் செண்டுமல்லியை பயிரிட்டால் அதிக லாபம் பெறலாம். விவசாயிகளுக்கு அதிக லாபத்தை ஈட்டித் தரும் செண்டுமல்லி அனைத்து வகையான மண்ணிலும் பயிரிடலாம். முக்கியமாக, மணல்பாங்கான மண், களிமண் கலந்த மண் மிகவும் ஏற்றதாகும். துல்லியத் தொழில்நுட்பச் சாகுபடி மூலம் செண்டுமல்லியைப் பயிரிடுவது குறித்து வேளாண்மைத் துறையினர் கூறியதாவது: செண்டுமல்லியை அக்டோபர்- ஜனவரி மாதம் வரையிலும், பிப்ரவரி-மே மாதம் வரையிலும் பயிர் செய்யலாம். **விதையளவு:** செண்டுமல்லி ஒரு ஹெக்டேருக்கு குட்டை ரகத்துக்கு 75 ஆயிரம் விதைகளும், நெட்டை ரகத்துக்கு 55 ஆயிரம் விதைகளும் இட வேண்டும். **நாற்றங்கால் பராமரிப்பு:** பதப்படுத்தப்பட்ட தென்னை நார்க் கழிவை வளர் தட்டுகளில் நிரப்பி குழிக்கு ஒரு விதை வீதம் நிரப்பி ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி பாலித்தீன் பேப்பர் மூலம் மூடி மூன்று நாள்கள் 50 சதவீத நிழல் உள்ள இடத்தில் அல்லது நிழல் வலையில் வைக்க வேண்டும். அப்போது முளைப்புத் திறன் அதிகரிக்கும். பின்னர் ஒரு நாளைக்கு இரு முறை பூ வாளி மூலம் தண்ணீர் தெளிக்க வேண்டும். நாற்றங்காலுக்கு 19:19:19 என்ற உரத்தை லிட்டருக்கு 5 கிராம் என்ற அளவில் கலந்து 15ஆம்

நாள் தெளிக்க வேண்டும். **நடவு முறை மற்றும் இடைவெளி:** 25 நாள்கள் வயதான செண்டுமல்லி நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். குட்டை வீரிய ஒட்டு ரகத்தை 40 ல 30 செ.மீ. அளவில் ஒரு ஹெக்டேருக்கு 74 ஆயிரம் செடிகளை நடலாம். நெட்டை வீரிய ஒட்டு ரகத்தை 60 ல 30 செ.மீ. என்ற அளவில் 55 ஆயிரம் செடிகளை நடலாம். **நீர்ப் பாசனம் மற்றும் நீர்வழி உரமிடுதல்:** வீரிய ஒட்டு ரகத்துக்கு 90:90:75-வுடன் தழை, மணி, சாம்பல் சத்து ஆகியவற்றை பயிர் காலம் முழுவதும் நீர்பாசனத்துடன் இட வேண்டும். **களை எடுத்தல்:** நடவு செய்த 30, 60ஆம் நாள்களில் களை எடுக்க வேண்டும். **மண் அணைத்தல்:** களையெடுக்கும் சமயத்தில் மண் அணைத்தல் அவசியம். இது நன்கு பேர் பிடிக்கவும், செடியினை தாங்குத் திறனை அதிகப்படுத்தவும் உதவுகிறது. **அறுவடை:** மேற்கண்ட முறைகளை முறையாக கடைபிடித்தால் நடவு செய்த 60ஆம் நாளில் இருந்து மகசூல் கிடைக்கும். காலை நேரத்தில் பூக்களைச் செடியில் இருந்து பறித்து கூடை அல்லது சாக்குப் பையில் அடைத்து விற்பனைக்கு எடுத்துச் செல்லலாம் என்றனர்.

## <u>கரும்புத் தோகையில் மக்கிய உரம் தயாரிப்பது எப்படி?</u>



கரும்புத் தோகையில் மக்கிய உரம் தயாரிப்பதன் மூலம் விவசாயிகள் கூடுதல் வருமானம் அடையலாம் என்று காஞ்சிபுரம் மாவட்டம், காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் பெ. முருகன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் விவசாயிகளுக்கு கூறிய அறிவுரை: கரும்புப் பயிரில் ஒரு பருவத்தில், 1 ஹெக்டருக்கு 10 முதல் 12 டன் வரை உலர்ந்த இலைகள் கிடைக்கின்றன.5-ஆவது, 7-ஆவது மாதமானலும் கரும்புப் பயிரிலிருந்து உலர்ந்த பயனற்ற இலைகளை நீக்கும் பருவம் ஆகும். உலர்ந்த இலையில் 28.6 சதவீதத்தில் கரிமச் சத்தும், 0.35 முதல் 0.42 சதவீதம் தழைச்சத்தும், 0.04 முதல் 0.15 சதவீதம் மணிச்சத்தும், 0.40 முதல் 0.50 சதவீதம்

சாம்பல் சத்தும் உள்ளது. எனவே, உலர்ந்த கரும்புத் தோகையை மக்கிய உரமாக்கி மண்ணில் இடுவதால், மண்ணின் இயற்பியல், வேதியியல், உயிரியல் தன்மை மேம்படுகிறது. இதனால், மண்ணின் மின் கடத்தும் திறன் குறைந்து, நீரைத் தக்க வைக்கும் திறன் அதிகரிக்கிறது. மேலும், மண்ணின் அங்ககத் தன்மை அதிகரித்து ஊட்டச்சத்துகளின் அளவும் அதிகரிக்கிறது. **தயாரிக்கும் முறை:** உலர்ந்த கரும்புத் தோகைகளை ஒன்றாக சேகரித்து மக்கிய உரம் தயாரிக்கும் இடத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும். மக்கிய உரம் தயாரிப்பதற்கு குழி எடுக்கத் தேவையில்லை. மண்ணின் மேற்பரப்பிலேயே தயாரிக்கலாம். உலர்ந்த கரும்புத் தோகையை சிறுசிறு துண்டுகளாக வெட்ட வேண்டும். 1 டன் கரும்புத் தோகைக்கு 2 கிலோ பயோ மினரலைசர் என்ற நுண்ணுயிரிகளின் கூட்டுக் கலவையைப் போட வேண்டும். மேலும், 1 டன் தோகைக்கு 50 கிலோ சாணத்தை 100 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். மேலும், 5 கிலோ ராக் பாஸ்பேட்டை ஒரு டன் கழிவுக்கு சேர்ப்பதால் மணிச்சத்தின் அளவு உயர்த்தப்படுகிறது. அனைத்து இடுபொருள்களையும் இட்டபின், கழிவுகளை குவியல்களால் உருவாக்க வேண்டும். இது 4 அடி உயரத்துக்கு இருந்தால் நல்லது. குவியல் கழிவுகளை 15 நாள்களுக்கு ஒரு முறை கிளரிவிட வேண்டும். காற்றோட்டம் இருந்தால் மட்டுமே நன்றாக மக்கும். குவியல் கழிவுகளில் 60 சதவீதம் ஈரப்பதம் இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும். ஈரப்பதம் குறைந்தால் அதில் உள்ள நுண்ணுயிரிகள் அனைத்தும் இறந்து விடும். குறைவான அளவு, மண் வாசனை, பழுப்பு கலந்த கருமை நிறம் இவை மக்குதல் முதிர்வை கண்டறிய உதவும். இந்த நிலை அடைந்தவுடன், மக்கிய உரத்தைப் பிரித்து உலர விட வேண்டும். மக்கிய உரத்துடன் நுண்ணுயிர்களான அசட்டோபாக்டர், அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, சூடோமோனாஸ் கலப்பதால் அவை மேலும் ஊட்டமேற்றப்படுகின்றன. இந்த செறிவூட்டப்பட்ட மக்கிய உரத்தை ஹெக்டருக்கு 5 டன் என்ற அளவில் கரும்புப் பயிருக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

## மாரண்டஹள்ளியில் 85 மி.மீ. மழை பதிவு

தருமபுரி மாவட்டம், மாரண்டஹள்ளியில் 85 மி.மீ மழை பதிவானது. தருமபுரி மாவட்டத்தில் புதன்கிழமை நள்ளிரவு முதல் வியாழக்கிழமை காலை வரை பரவலாக மழை பெய்தது. மேலும், தருமபுரி மாவட்டத்தில் உள்ள பெருமாள் கோயில்களில் சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி தொடங்கும் போது லேசான மழை பெய்தது. இதைப் பொருள்படுத்தாமல் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து மழையில் நனைந்தவாறு சுவாமி தரிசனம் செய்தனர். மாவட்டத்தில் பெய்த மழை அளவு வியாழக்கிழமை காலை பதிவான நிலவரம்: (மி.மீட்டரில்) மாரண்டஅள்ளியில் அதிகபட்சமாக 85, பாலக்கோடு 29, பஞ்சப்பள்ளி 35, பாப்பிரெட்டிப்பட்டி 2.4, பென்னாகரம் 50, ஒகேனக்கல் 25.4, மாவட்ட ஆட்சியரகம் 1 மி.மீ. மழை பதிவானது.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருவதால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. புதன்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நொடிக்கு 1018 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பரவலாக மழை பெய்ததால், வியாழக்கிழமை காலை அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 2291 கனஅடியாக அதிகரித்தது. வியாழக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 95.90 அடியாக இருந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கும், கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்துக்கும் நொடிக்கு 1,400 கனஅடிவீதம் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. அணையின் நீர் இருப்பு 59.65 டி.எம்.சி.யாக இருந்தது. மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு மேலும் நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளதாக பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு நிரம்பியது வலசக்கல்பட்டி ஏரி

கெங்கவல்லி அருகே உள்ள வலசக்கல்பட்டி ஏரி நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு நிரம்பியது. கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் மழையால் ஏரி நிரம்பியது.

இதனால், மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். மேலும், கெங்கவல்லி வட்டாட்சியர் சக்திவேல் உள்ளிட்ட வருவாய்த் துறையினர் மலர் தூவி ஏரியை வழிபட்டனர். தொடர்ந்து, வருவாய்த் துறையினர் அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## சீர்காழியில் பலத்த மழை

சீர்காழியில் வியாழக்கிழமை பலத்த மழை பெய்தது. சீர்காழியில் வியாழக்கிழமை காலை பனிமூட்டம் காணப்பட்ட நிலையில் காலை 8 மணியளவில் கருமேகம் சூழ்ந்து திடீரென மழை பெய்தது. பின்னர், விட்டுவிட்டு மழை பெய்தது. பிற்பகல் 1 மணியளவில் பலத்த மழை பெய்தது. இதனால் நகரின் அனைத்துப் பகுதிகளிலும் சாலைகளில் தண்ணீர் தேங்கி நின்றது. ஆங்கிலப் புத்தாண்டையொட்டி, வியாழக்கிழமை பொதுமக்கள் மழையில் நனைந்தபடி கோயில் மற்றும் தேவாலயங்களுக்குச் சென்று வந்தனர்.

## தூய பால் உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி முகாம்

புதுச்சேரி, வேளாண் துறை, கரையாம்புத்தூர் பண்ணை தகவல் மையம் சார்பில் தூய பால் உற்பத்தி தொழில்நுட்பங்கள், மதிப்பு கூட்டுதல் குறித்த பயிற்சி முகாம் புதன்கிழமை கரையாம்புத்தூரில் நடைபெற்றது. வேளாண் துறை, பண்ணை தகவல் மற்றும் ஆலோசனை மையம் சார்பில் பயிர் செய்யும் விவசாயிகள், கால்நடை விவசாயிகள் மற்றும் உள்நாட்டு மீன் வளர்ப்பு விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. கரையாம்புத்தூர் வேளாண் அலுவலர் பரமநாதன் வரவேற்று விவசாய உற்பத்தி பொருள்களில் மதிப்பு கூட்டல் செய்வதின் அவசியத்தை விளக்கினார். இணை வேளாண் இயக்குநர் (பொ) சிவசங்கரமுருகன் சிறு பால் பண்ணைகள் அமைத்தல் மற்றும் பால் பொருள்களில் மதிப்புகூட்டி சந்தைப்படுத்துவதனால் ஏற்படும் நன்மைகள் குறித்துப் விளக்கினார். கூடுதல் வேளாண் இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் (ஆத்மா) ரவிப்பிரகாசம் தலைமை வகித்து ஆத்மா திட்டம் பற்றியும் ஆத்மா குழுக்கள் கால்நடை தீவன புல் வளர்ப்பதின் அவசியத்தையும், குழுவாக கால்நடைகளில் இயந்திரத்தை பயன்படுத்துவது

குறித்தும் எடுத்துரைத்தார். மகாத்மாகாந்தி மருத்துவக் கல்லூரியின் கால்நடை மருத்துவ அதிகாரி டாக்டர் முரளிதரன் தூய பால் உற்பத்தி தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பிலும், பால் உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் வல்லுனர் கால்நடை மருத்துவர் கவுதமன் பாலில் மதிப்பு கூட்டுதல் மற்றும் பலவகையான பால்பொருட்கள் தயாரித்தல் என்ற தலைப்பிலும் பயிற்சியளித்தனர். ஆத்மா மேலாளர்கள் பக்தவட்சலம் மற்றும் கால்நடை மருத்துவர் செல்வமுத்து பாலில் இருந்து பால்கோவா, பண்ணீர் மற்றும் இனிப்பு தயிர் தயாரிக்கும் முறைகள் குறித்து நேரடியாக செயல்விளக்கம் செய்து காண்பித்தனர். ஆத்மா குழுக்குளுக்கு சுழல் நிதி காசோலைகளை திட்ட இயக்குநர் வழங்கி பயிற்சி கையேட்டையும் வெளியிட்டார். கரையாம்புத்தூர் விவசாய ஆலோசனை குழு தலைவர் கோகுலா நன்றி கூறினார். பணையடிக்குப்பம், கரையாம்புத்தூர், சின்ன கரையாம்புத்தூர், மணமேடு மற்றும் கடுவணூர் கால்நடை ஆத்மா குழு விவசாயிகள் கலந்துகொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் கங்காதுரை, களப்பணியாளர்கள் வெங்கடேசன், சித்தார்தன் ஊழியர்கள் மணிகண்டன், கன்னிவேல் ஆகியோர் செய்திருந்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>ரூ.60 லட்சம் பருத்தி ஏலம்</u>**

நாமக்கல் : நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 60 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 3,600 பருத்தி மூட்டைகளை

விற்பனைக்கு கொண்டு வந்தனர்.டி.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 5,009, குறைந்தபட்சமாக, 4,640 ரூபாய், சுரபி ரகம் அதிக பட்சமாக, 6,469, குறைந்த பட்சமாக, 6,100 ரூபாய். ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,390, குறைந்த பட்சமாக, 3,820 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்று, மொத்தமாக, 60 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது.விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, ஆகிய பகுதிகளை சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

**<u>பசுந்தீவன திட்டத்தில் விவசாயிகள் ஆர்வம்! 8,082 பேர் மானியம் மூலம் பயன்</u>**

ஈரோடு : மாநில பசுந்தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ், பால் உற்பத்தியை அதிகரிக்க, ஈரோடு மாவட்டத்தில், 8,000க்கும் மேற்பட்ட விவசாயிகள், நடப்பாண்டில் பயனடைந்துள்ளதாக, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் ஜெயராமன் தெரிவித்துள்ளார். இதுபற்றி, மண்டல இணை இயக்குனர் ஜெயராமன் கூறியதாவது:கடந்த, ஜூன் மாதம், ஈரோடு கால்நடை பராமரிப்புத்துறைக்கு, மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 1.46 கோடி ரூபாயை, அரசு ஒதுக்கீடு செய்தது. ஈரோடு மாவட்டத்தில், மூன்று லட்சத்து, 70 ஆயிரம் கால்நடைகள் வளர்க்கப்படுகிறது.பால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், அதிக மகசூல் தரக்கூடிய பசுந்தீவன மேலாண்மை திட்டம், தீவன சோளம் மற்றும் தட்டை பயிறு, காராமணி சாகுபடிதிட்டம் (மானாவாரி), நீர் சேகரிக்கும் கருவி வழங்கும் திட்டம், அகத்தி விதைகளை வினியோகித்து சாகுபடி செய்ய ஊக்குவிப்பு திட்டம், அசோலா பாசிதீவனம் திட்டம் என, ஐந்து திட்டத்துக்காக, அரசின் நிதியான, 1.46 கோடி பயன்படுத்தப்பட்டது.அதிக மகசூல் தரக்கூடிய பசுந்தீவன புல் சாகுபடி திட்டத்தில், ஒரு நபருக்கு, கால் ஏக்கருக்கு, 2,000 ரூபாய் மானியம் வீதம், 450 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி அதிகரிக்கப்பட்டு, அதில், 1,763 விவசாயிகள் பயனடைந்தனர். தீவனச்சோளம் தட்டை பயிறு திட்டத்தில், கால் ஏக்கருக்கு, ஒரு நபருக்கு, எட்டு கிலோ சோளம்,

ஒரு கிலோ தட்டை பயிறு விதைகள் மானிய அடிப்படையில் வழங்கப்பட்டு, 2,600 ஏக்கர் பரப்பளவில், 2,983 விவசாயிகள் பயனடைந்தள்ளனர்.நீர் சேகரிக்கும் கருவி வழங்கும் திட்டத்தின் மூலம், ஒரு நபருக்கு, 18,750 ரூபாய் மானியமாகவும், அதில், 220 நபர்கள் பயன் பெற்றுள்ளனர். அகத்தி விதைகளை வினியோகிக்கும் திட்டத்தின் மூலம், ஒரு ஏக்கர் வரை மானிய அடிப்படையில், விதைகள் வழங்கப்பட்டு, 300 ஏக்கரில் மகசூல் அதிகரித்ததில், 2,716 விவசாயிகள் பயன்பெற்றனர்.அசோலா தீவன திட்டத்தில், ஒரு நபருக்கு, 1,600 ரூபாய் வீதம் மானிய அடிப்படையில், 400 விவசாயிகள் என மொத்தம், 8,082 விவசாயிகள், ஈரோடு மாவட்டத்தில் பயன் பெற்றுள்ளனர்.தற்போது, நல்ல மழை பெய்து வருவதாலும், கால்நடைகளை விவசாயிகள் அதிகமாக வாங்குவதாலும், இத்திட்டத்தின் மீது, விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.இவ்வாறு அவர் கூறினார்.

<u>**லாபகரமான கறவை மாடு வளர்ப்புக்கு பயிற்சி முகாம்**</u>

வேலாயுதம்பாளையம்: கரூர் மாவட்டம், பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரக தொழில் முனைவோர் பயிற்சி மையத்தின் நிதியுதவியுடன், லாபகரமான கறவை மாடு வளர்ப்பும், பண்ணை கழிவுகளின் மறுசுழற்சியும் பற்றிய பயிற்சி நடந்தது. இதில், மகளிர் திட்டத்தின் வழியாக உருவாக்கப்பட்ட ஒத்த தொழில் குழு பெண்கள், ஆறு பேரும், பாலவிடுதி கிராமத்திலிருந்து, 23 பேரும் பங்கேற்றனர். பயிற்சியில், அறிவியல் ரீதியான கறவை மாடு வளர்ப்பில் முக்கிய பங்களிக்கும் பராமரிப்பு முறைகளான பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, மாடுகளைத் தாக்கும் நோய்கள், அவற்றை தடுக்கும் முறைகள், மூலிகை மருத்துவ சிகிச்சை முறைகள், விற்பனை உத்திகள், வங்கி கடன் உதவி, பண்ணைக்கான காப்பீடு மற்றும் பண்ணைப் பொருளாதாரம் ஆகிய தலைப்புகளை மையமாகக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது. பசுந்தீவன உற்பத்தி, பதப்படுத்துதல், கலப்பு தீவனம் தயாரித்தல், அசோலா வளர்ப்பு, தூய்மையான பால் உற்பத்தி, பால் பொருட்கள்

தயாரிப்பு, மண் புழு உரம் தயாரித்தல், சாண எரிவாயு உற்பத்தி ஆகிய தலைப்புகள் பல்கலை பேராசிரியர்களால் செயல்முறை விளக்கத்துடன் நடத்தப்பட்டது. பயிற்சியாளர்கள், செல்லாண்டிபாளையத்திலுள்ள அறிவியல் ரீதியான கறவை மாட்டு பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நிறைவு விழாவில், மகளிர் திட்டத்தின் திட்ட அலுவலர் முகமது சகாபுதின், உதவி திட்ட அலுவலர்களான லட்சுமணன் மற்றும் தனலட்சுமி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரக தொழில் முனைவோர் பயிற்சி மையத்தின் இயக்குனர் தமயந்தி ஆகியோர், கால்நடை வளர்ப்பு திட்டங்கள் மற்றும் வங்கி கடன் உதவி குறித்து பயிற்சியாளர்களுடன் கலந்துரையாடினர். பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ், பயிற்சி கையேடுகள், தாது உப்பு கலவை ஆகியவை வழங்கப்பட்டன. பயிற்சிக்கான ஏற்பாடுகளை மையத்தின் பேராசிரியர்கள் அகிலா மற்றும் மருத்துவர் பாரதி ஏற்பாடு ஆகியோர் செய்தனர்.

## <u>வாழையை தனிபயிராக சாகுபடி செய்ய வலியுறுத்தல்! தரமும், சுவையும் அதிகரிக்கும் என தகவல்</u>

திண்டுக்கல் : தரமான வாழைதாரும், சுவையான பழமும் பெற விரும்பும் விவசாயிகள் ஊடுபயிராக இல்லாமல் தனியாக மலைவாழையை சாகுபடி செய்ய வேண்டுமென வலியுறுத்தப் பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் கீழ் மலை பகுதிகளான ஆடலூர், தாண்டிக்குடி, பாச்சலூர், கே.சி.,பட்டி, சிறுமலையில் மலைவாழை அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. காபி, மிளகு, சவுக்கு, கொடை ஆரஞ்சுகளோடு சேர்த்து ஊடுபயிராக மலைவாழை பயிரிடப்படுகிறது. இதனால் எதிர்பார்க்கும் தரமும், சுவையும் வாழையில் பெறமுடியாத என தெரிவிக்கப்பட்டுள்ளது.மலை வாழை சாகுபடி மூலம் அதிக லாபம் ஈட்டி வரும் விவசாயி ரிஜிஸ் கூறியதாவது:"மலைவாழையில் விருப்பாட்சி, சிறுமலை ரகங்கள் உள்ளன. இதன்"ருசி' அலாதியானது. அதிக புரதசத்து இந்த பழத்தில் மட்டுமே உள்ளது. இதனால்தான் பஞ்சாமிர்தத்தில் தவிர்க்க முடியாத அங்கமாக மலைவாழை உள்ளது. ஊடுபயிராக சாகுபடி செய்தால் எதிர்பார்க்கும் வெப்பம் வாழைக்கு கிடைக்காது. 35 ஏக்கர்

பரப்பளவுள்ள எனது தோட்டத்தில் விருப்பாட்சி ரக மலைவாழை பயிரிட்டுள்ளேன். தேவைக்கேற்ற நீரினை சொட்டுநீர் பாசனம் மூலம் அளித்து வருகிறேன். இதனால் பழத்தின் அளவு அதிகரிக்கும். பூச்சி தொந்தரவு ஏற்படாது.ஒரு கிலோ விருப்பாட்சி மலைவாழை ரூ.65 லிருந்து ரூ.70 வரை விற்பனையாகிறது. மலைவாழைக்கு அதிக கிராக்கி இருப்பதால் ஒரு பழம் ரூ.8 முதல் ரூ.10 வரை சில்லரை வியாபாரிகள் விற்கின்றனர். தனிப்பயிராக இதனை பயிரிட்டால் விவசாயிகள் அதிக லாபத்தினை பெறலாம்,' என்றார்.

**<u>விளைச்சல் அதிகரிப்பிற்கு புதிய தொழில் நுட்பங்கள்; பயிலரங்கில் தகவல்</u>**

காந்திகிராமம் : "புதிய தொழில் நுட்பங்களின் மூலம் காய்கறி விளைச்சலை அதிகரிக்கலாம்' என காந்திகிராம பல்கலை துணைவேந்தர் நடராஜன் தெரிவித்தார். காந்திகிராம பல்கலை வேளாண் அறிவியல் மையத்தில் வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கான பசுமைகுடிலில் காய்கறி சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த பயிலரங்கம் நடந்தது. அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் வரவேற்றார். துணைவேந்தர் நடராஜன் பேசியதாவது: "பசுமைக்குடிலில் 1980 முதல் காய்கறிகள் சாகுபடி செய்வது குறித்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை வலுப்படுத்தும் வகையில் நாள்தோறும் புதுப்புது தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இந்த நுட்பங்களை கடைபிடித்து காய்கறி விளைச்சலை பலமடங்கு அதிகரிக்கலாம். பசுமைகுடிலின் முக்கியத்துவம் குறித்து வேளாண்மை விரிவாக்க பணியாளர்கள் விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும்,' என்றார். பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி முதல்வர் பாலமோகன் பேசியதாவது: "சந்தையின் தேவையை பொறுத்து காய்கறிகளை விவசாயிகள் சாகுபடி செய்ய வேண்டும். அப்போது தான் நல்ல வருமானத்தை பெற முடியும். இதுகுறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும்,'என்றார். வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை டீன் கணேஷ், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர்கள் கிஷோர்குமார், சீனிவாசன், தொழில்நுட்ப வல்லுனர்கள் செந்தில்குமார், சாகின்தாஜ் பயிற்சி அளித்தனர்.

## நெற்பயிர்களில் இலை சுருட்டு புழுக்கள்; கட்டுப்படுத்துமாறு வேளாண் யோசனை

பழநி : பழநியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்களில் ஏற்பட்டுள்ள இலைசுருட்டு புழுதாக்குதலை விவசாயிகள் ஆரம்பத்திலேயே கட்டுப் படுத்தவேண்டும் என வேளாண்துறையினர் வலியுறுத்தியுள்ளனர். பழநி அய்யம்புள்ளி, பாலசமுத்திரம், புதச்சு, கோதைமங்கலம், தாமரைக்குளம், அ.கலையம்புத்தூர், ரவிமங்கலம், ஆயக்குடி உள்ளிட்ட பகுதிகளில் 9000 ஏக்கர் பரப்பளவில் சம்பா நெல்சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் பரவலாக இலைசுருட்டு புழு தாக்குதல் தோன்றியுள்ளது. இந்த புழுக்கள் இலைகளை நீளவாக்கில் மடக்கி உட்பகுதிகளிலிருந்து பச்சையத்தை சுரண்டி உண்பதால் பயிர்கள் வெள்ளைநிறத்தில் பச்சையம் இல்லாமல் காணப்படும். இதனால் மகசூல் பாதிக்கும் என்பதால் புழுவை கட்டுபடுத்த நிலத்தின் தேவையறிந்து தழைச்சத்து இடவேண்டும். நீர் அதிகம் தேங்காமல், காய்ச்சல், பாய்ச்சலுமாக பாசனம் செய்தல், டிரைக்கோ கிரமா ஒட்டுண்ணி பயன்படுத்துதல், அசாடிராக்டின், குளோர்பைரிபாஸ் தெளித்தல் முறையில் புழுவை கட்டுபடுத்தலாம். மேலும் விபரங்களுக்கு அருகேயுள்ள வேளாண் உதவி அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்,' என பழநி வேளாண் உதவி இயக்குனர் சாந்தாமணி தெரிவித்துள்ளார்.

## மொச்சை பயிர் சீசன் துவக்கம்

தாடிக்கொம்பு : உணவாக பயன்படுத்தப்படும் மொச்சை பயிர் சீசன் தற்போது துவங்கியுள்ளது. தாடிக்கொம்பு அருகே உள்ள கிராமங்களான பிரகரை, பாறையூர், காமனூர், மறவபட்டி, விராலிப்பட்டியில் மொச்சை அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. எழுபது நாட்களில் அறுவடை செய்யலாம். தண்ணீர் தேங்காத மேட்டு நிலப்பகுதியில் மானாவாரியாக மொச்சை பயிர் செய்யப்படும். தற்போது பூக்கும் பருவத்தில் மொச்சை உள்ளது. பனி தாக்கம் அதிகமிருப்பதால் பூ உதிராமல் இருக்கவும், பூச்சி தாக்காமல் இருக்கவும் தேவையான வழிமுறைகளை விவசாயிகள் கடைபிடித்து வருகின்றனர்.

பொங்கல் பண்டிகையின்போது எதிர்பார்க்கும் விலை கிடைக்கும் என்ற நம்பிக்கை விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>திருவண்ணாமலை மாவட்டத்தில் பரவலாக மழை</u>

திருவண்ணாமலை, : திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக ஒரு சில இடங்களில் பரலாக மழை பெய்தது. திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு ஒரு சில இடங்களில் பரவலாகவும், திருவண்ணா மலையில் லேசான மழையும் பெய்தது. இதே போல திருவண்ணாமலையில் நேற்று காலையில் வானம் மேக மூட்டமாக காணப்பட்டது. பின்னர் மழை தூறிக்கொண்டே இருந்தது. இந்த மழையினால் இரவில் குளிர்ந்த காற்று வீசியது. திருவண்ணாமலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழையின் அளவு வந்தவாசி: 3 மி.மீ, சாத்தனூர்அணை: 1 மி.மீ. மழை என பதிவாகியுள்ளது.

## <u>சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றிற்கு ரூ.2550 விவசாயிகள் மகிழ்ச்சி</u>

நாமக்கல், :ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பணியாளர்களும் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இப்போராட்டத்தில், மோகனூர் கூட்டுறவு ஆலைப் பணியாளர்கள் பங்கேற்கவில்லை. அக்.26ம் தேதி முதல் மோகனூரில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரைவைப் பருவம் தொடங்கியது. 2013-2014ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட விலையான டன் ஒன்றிற்கு ரூ.2550யை விவசாயிகள் பெற்று வந்தனர். மற்ற கூட்டுறவு ஆலைகளில் ஸ்ட்ரைக் நடைபெறுவதால், மோகனூர் ஆலைக்கு, பிற கூட்டுறவு

ஆலைகளில் இருந்தும் கரும்புகள் அரவைக்காக கொண்டு வரப்படுகின்றன. ஒவ்வொரு 15 நாட்களுக்கு ஒரு முறையும் விவசாயிகளுக்கு பணம் அனுப்பப்படும். இதன்படி, கடந்த டிச.8ம் தேதி விவசாயிகளுக்கு பணம் அனுப்பப்பட்டுள்ளது. டிச.23ம் தேதி விவசாயிகளுக்கு அனுப்பப்பட வேண்டிய பணம் நேற்று முன்தினம் (டிச.29) வரையில் அனுப்பப்படவில்லை. இதற்கிடையில், மத்திய அரசு அறிவித்துள்ள ரூ.2200யை விவசாயிகளுக்கு வழங்க கோரி, அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுப் பணித்துறை சர்க்கரை ஆலைகளுக்கும் சென்னை சர்க்கரை துறை இயக்குநர் கடிதம் அனுப்பினர். இதனால் விவசாயிகளிடையே கடும் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதனால் கரும்பு விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை சுட்டிக்காட்டி நேற்று தினகரன் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது. இதைதொடர்ந்து, 2013-2014ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட விலையான டன் ஒன்றிற்கு ரூ.2550யை நேற்று விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மத்திய அரசு அறிவித்துள்ள ரூ.2200யை வழங்கவேண்டும் என உத்தரவிடப்பட்டு இருந்த நிலையில் மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் டன் ஒன்றிற்கு ரூ.2550 வழங்கப்பட்டதற்கு விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். எனினும், அதிகரித்து வரும் செலவுகளுக்கு கட்டுப்படி ஆகக்கூடிய விலையை, பொங்கல் பண்டிகைக்கு முன்பாக நிர்ணயம் செய்து தமிழக அரசு அறிவிக்க வேண்டும் என கரும்பு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து மோகனூர் கரும்பு பயிரிடுவோர் சங்க செயலாளர் நவலடி கூறியதாவது: உரம் உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தண்ணீர் பற்றா குறைவினால் ஆண்டுதோறும் கூடுதலாக செலவு ஆகிறது. இத்தகைய செலவுகளுக்கு ஈடுகொடுக்கும் விதமாக, கரும்பிற்கான விலையை டன் ஒன்றிற்கு ரூ.3 ஆயிரம் முதல் ரூ.3500 வரை வழங்க வேண்டும் என போராடிவருகிறோம். ஆனால், மத்திய அரசு அறிவித்துள்ள விலையை வழங்கக்கோரி கடிதம் அனுப்பப்பட்டதால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தனர். இதனை எதிர்த்து விவசாயிகள் போராடும் சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில்,

கடந்த ஆண்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விலையான டன் ஒன்றிற்கு ரூ.2550 தற்பொழுது வழங்கப்பட்டுள்ளது. எனினும், பொங்கல் பண்டிகைக்கு முன்பாக முத்தரப்பு கூட்டத்தை கூட்டி, டன் ஒன்றிற்கு ரூ.3500 வழங்க வேண்டும். நடப்பு ஆண்டிற்கான விலையை கூடுதலாக வழங்கவில்லை எனில், விவசாயிகளை திரட்டி தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

## 7.5 டன் தேங்காய் பருப்பு ரூ6.10 லட்சத்திற்கு ஏலம்

ஜலகண்டாபுரம், : ஜலகண்டாபுரத்தில் உள்ள திருச்செங் கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கொங்கணாபுரம் கிளை சேவை மையத்தில் நேற்று தேங்காய் பருப்பு ஏலம் நடைபெற்றது.இதில் ஜலகண்டாபுரம், நங்கவள்ளி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான சூரப்பள்ளி, ஆவடத்தூர், சின்னசோரகை, பெரியசோரகை, பனிக்கனூர், தோரமங்கலம், கரிக்காப்பட்டி ஆகிய பகுதி களை சேர்ந்த விவசாயிகள் 148 மூட்டைகளில் 7,500 கிலோ தேங்காய் பருப்புகளை விற்பனைக்காக கொண்டு வந்தனர். சென்ற வாரம் குறைந்த பட்சமாக கிலோ ரூ80க்கும், அதிகபட்சமாக ரூ86.10 ஏலம் போனது. இந்த வாரம் குறைந்த பட்சமாக கிலோ 85 ரூபாய்க்கும் அதிகபட்சமாக 90.60 ரூபாய்க்கும் ஏலம் விடப்பட்டது. இதன் மூலம் 6,10,000 ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. சென்ற வாரத்தை விட இந்த வாரம் சராசரியாக கிலோவுக்கு 4.50 காசுகள் அதிகம் கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## புரதசத்து பற்றாக்குறை போக்க பயறுவகை பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும் வேளாண் அதிகாரி வேண்டுகோள்

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரிய சாமி வெளியிட்டுள்ள அறிக்கை: புரதசத்து பற்றாக்குறையை போக்க உளுந்து, பச்சை பயறு, துவரை போன்ற பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகரிக்க வேண்டும். இவ்வகை பயிர்களை தனிப்பயிராகவோ, பிற பயிர்களுடன் ஊடு பயிராகவோ, கலப்பு பயிராகவோ, வரப்பு பயிரா கவோ

பயிரிட்டு மகசூலை அதிகரிக்க செய்ய வேண் டும். சராசரியாக நாளொன் றுக்கு தனிமனிதன் ஒருவருக்கு 85 கிராம் புரதசத்து தேவைப்படுகிறது. இந்த சத்து உளுந்து, பாசி பயறு, துவரை, தட்டை பயறு, மொச்சை, கொண்டக்கடலை, பட்டாணி, போன்ற பயறுவகை பயிர் கள் மட்டுமே கொடுக்கிறது. நாளொன்றுக்கு தற்போது 36.5 கிராம் புரதசத்து மட்டுமே நமக்கு கிடைக்கிறது. 48.5 கிராம் பற்றாக்குறை ஏற்படுகிறது. இக்குறையை போக்க பயறு வகை பயிர்களை அதிகம் சாகுபடி செய்ய வேண்டும்.

## பெரியகுளத்தில் விழுந்தது மழை

பெரியகுளம், : பெரியகுளம் பகுதியில் நேற்று சுமார் ஒரு மணி நேரம் மழை பெய்தது. பெரியகுளம் பகுதியில் நேற்று காலை முதலே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. காலையில் பனியின் தாக்கமும் குறைவாக இருந்தது. நேற்று பகல் நேரத்தில் சாரல் மழை பெய்தது. பின்னர் சுமார் 1 மணி நேரமாக பலத்த மழை கொட்டியது. மழை காரணமாக பெரியகுளம் பகுதி குளிர் ச்சியாக காணப்பட்டது. தற்போது அரையாண்டு தேர்வு விடுமுறை விடப்பட்டுள்ளதால் பள்ளி மாணவர்கள் சாலையில் தேங்கிய நீரில் காகித கப்பல் விட்டு மகிழ்ந்தனர். அதே நேரத்தில் நடைபாதை வியாபாரிகள் மழையால் பாதிப்படைந்தனர்.

## மிளகாய், வாழை பயிர்களுக்கு இன்சூரன்ஸ் செய்ய ஜன.15 கடைசி நாள்

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் மிளகாய், வாழை பயிர்களுக்கு பயிர் கடன் பெறாத விவசாயிகள் இன்சூரன்ஸ் செய்ய ஜன.15 கடைசி நாள் என தோட்டக்கலைத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் பாலமுருகன் விடுத்துள்ள அறிக்கை: சிவகங்கை மாவட்டத்தில் மிளகாய் பயிர் 10 ஆயிரம் ஏக்கரிலும், வாழை பயிர் சுமார் 1,250 ஏக்கர் பரப்பிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் சார்பில் வட்டார அளவில் பயிர் கணக்கீடு செய்ய அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி மிளகாய் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு

இயல்பான காப்பீட்டு தொகை ரூ.1,672. காப்பீட்டு திட்டத்தில் சேர கடன் பெறும் விவசாயிகள் ரூ.84, கடன் பெறாத விவசாயிகள் ரூ.75 பிரிமிய தொகையாக செலுத்த வேண்டும். இந்த காப்பீட்டு தொகைக்கு அதிகமாக காப்பீடு செய்ய விரும்பும் விவசாயிகள் கூடுதலாக ஏக்கருக்கு ரூ.251 செலுத்த வேண்டும். வாழைப்பயிருக்கான காப்பீட்டு திட்டத்தில் இயல்பான காப்பீட்டு தொகை ஒரு ஏக்கருக்கு ரூ.5 லட்சத்து 17ஆயிரத்து 751. இதில் சேர கடன் பெறும் விவசாயிகள் ரூ.12,944, கடன் பெறாத விவசாயிகள் ரூ.11,649 செலுத்த வேண்டும். மிளகாய் மற்றும் வாழை பயிர் காப்பீடு செய்ய விரும்பும் பயிர் கடன் பெறாத விவசாயிகள் ஜன.15க்குள் கூட்டுறவு வங்கி அல்லது தேசிய வங்கியில் பிரிமிய தொகை யை செலுத்த வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**<u>முக்கூடல் வேளாண் கூட்டுறவு வங்கியில் பொது சேவை மையம் திறப்பு</u>**

பாப்பாக்குடி, : முக் கூடல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பொது சேவை மையம் திறக்கப்பட்டது. முக்கூடல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கட்டிடத்தில் மாவட்ட ஆளுமை திட்டத்தின் கீழ் பொது சேவை மையம் திறக்கப்பட்டது. மையத்தை சேரன்மகா தேவி சப் கலெக்டர் விஸ்ணு தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். கூட்டுறவு சங்க செயலாளர் சேகர் வரவேற்றார். மாவட்ட தகவல் அலுவலர் தேவராஜன் திட்டம் குறித்து பேசினார். தொடர்ந்து சப் கலெக்டர் விஷ்ணு பேசியதாவது: அம்பை வட்டத்திற்குட்பட்ட அம்பை, சேரன்மகாதேவி, கடையம், பாப்பாக்குடி ஒன்றிய அலுவலகத்திற்குட்பட்ட 16 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மாவட்ட ஆளுமை திட்டத்தின் கீழ் பொது சேவை மையம் திறக்கப்பட்டுள்ளது. இம்மையத்தின் மூலம் சாதி, வருமானம், இருப்பிடம், முதல் பட்ட தாரி மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான சான்றிதழ்களுக்கு விண்ணப்பிக்கலாம். ரூ.50 செலுத்த வேண்டும். இதேபோல் திருமணம், கலப்பு திருமணம், விதவை கள் மகள் திருமணம், விதவைகள் மறுமணம், ஆதரவற்ற பெண்கள் திருமணம் போன்ற

உதவி திட்டங்களுக்கு ரூ.100 செலுத்தி விண்ணபிக்க வேண்டும். விண்ணப்பிக்கபடும் விண்ணப்பங்கள் இணைய தளம் மூலம் சம்பந்தபட்ட அதிகாரிகள் சரிபார்க்கப்பட்டு ஏற்று கொள்ளப்படும். ஏற்று கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக் கான சான்றிதழ்களை மீண்டும் இணையதளம் மூலம் பொது சேவை மையத்திற்கு அனுப்பப்படும். இதற்கான தகவல் பய னாளிகளின் கைபேசிக்கு குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்படும். இதன் மூலம் எந்த அலுவலகத்திற்கும் செல்லாமல் பொது சேவை மையத்திற்கு சென்று பயனாளிகள் சான்றிதழ்களை பெற்று கொள்ளலாம் என்றார். இதில் மண்டல கூட்டு றவு இணைப்பதிவாளர் கனகசுந்தரம், துணை பதிவாளர் பெரியநாயகி புஷ்பம், அம்பை தாசில்தார் சேது ராமலிங்கம், பாப்பாக் குடி கூட்டுறவு அலுவலர் மீனாட்சி நாதன், நெல்லை மேலாளர் சந்திரா, உதவி தகவல் அலுவலர் ஆறுமுக நயினார், பேரூராட்சி தலை வர் லெட்சுமணன்,துணை தலைவர் ஜெரால்ட், துணை தாசில்தார் தாஸ் பிரியன், சுப்பிரமணியன், ராமசந்திரன், வருவாய் ஆய்வாளர் ஜோஸ்பின், கிராம அலுவலர் முருகன், கூட்டுறவு சங்க துணை தலைவர் வில்சன் ஆகி யோர் கலந்து கொண்ட னர்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>பொள்ளாச்சி தெற்கு ஒன்றிய பகுதியில் தென்னை மரங்களுக்கு நுண்ணூட்ட உரமிட விவசாயிகளுக்கு அறிவுரை</u>**

பொள்ளாச்சி தெற்கு ஒன்றிய பகுதியில் பெய்த மழையின் காரணமாக போதிய ஈரப்பதம் உள்ள தால் தென்னைக்கு நுண் ணூட்ட உரமிடலாம் என்று வேளாண்மை துறை சார்பில் விவசாயி களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மழை பொள்ளாச்சி பகுதியில் கடந்த சில நாட்களாக இரவு நேரத்தில் அவ்வப் போது மழை பெய்து வருகிறது. இந்த மழையை பயன்படுத்தி தென்னை மரங்களுக்கு நுண் ணூட்ட உரமிட வேளாண்மை துறையினர் விவசாயிகளுக்கு

அறிவுரை வழங்கி வருகிறார் கள். இது குறித்து பொள்ளாச்சி தெற்கு ஒன்றிய வேளாண்மை துறை உதவி இயக்குனர் பெருமாள் சாமி கூறிய தாவது:–

பொள்ளாச்சி தெற்கு ஒன் றிய பகுதியில் போதிய மழை பெய்துள்ளது. இப்பகுதி யில் பிரதான சாகுபடியாக தென்னை விளங்குகிறது. இதைப் பயன்படுத்தி தென் னைக்கு நுண்ணூட்ட உரம் இட வேண்டும். ஒரு மரத்திற்கு வருடத்திற்கு ஒரு கிலோ நுண்ணூட்டம் பரிந் துரைசெய் யப்படுகிறது. இதை பாதியாகப் பிரித்து தென்னை மரத்தை சுற்றி அரை அடி ஆழத்திற்கு அரை வட்ட வடிவில் குழி தோண்டி அதில் நுண்ணூட் டத்தை போட்டு மூடிவிட வேண்டும். மீதி அரை வட்ட குழியில் 6 மாதத்திற்கு பிறகு இட வேண்டும். மகசூல் அதிகரிக்கும்

நுண்ணூட்டம் இடுவதால் தென்னை மரத்தில் மகசூல் அதிகரிக்கும், குரும்பை உதிர் வது தடுக்கப்படும். நுண் ணூட்ட உரம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட் டுள்ளது. இவை கிலோ ரூ.61.65க்கு கிடைக்கும். தைப் பட்டத்தில் நிலக்கடலைபயிரி டலாம். டி.எம்.வி–7 ரக நிலக் கடலை விதை 4டன் இருப்பில் உள்ளது. விவசாயிகளுக்கு கிலோ ரூ.74.50க்கு வழங்கப்படு கின்றன. தட்டைப்பயறு விதை கோ.சி.பி.7 இரண்டாயிரம் கிலோ இருப்பில் உள்ளது. கிலோ விற்கு ரூ.25 மானியம் போக ரூ.32க்கு பெற்றுக் கொள்ள லாம். மேலும் அனைத்துப் பயிர்களுக்கு பயன்படுத்தும் உயிர் உரங்களான அசோஸ் பைரில்லம், பாஸ்போ பாக்டீ ரியா, ரைசோபியம் தேவை யான அளவு உள்ளன. உயிர் உரங்களை தொழுஉரம், மண், குப்பை மண் ஆகியவற்றுடன் கலந்து இட வேண்டும். ரசாயன உரத்துடன் கலக்கக் கூடாது. இவ்வாறு அவர் கூறினார்.

## நாமக்கல்லில் 3,600 மூட்டை பருத்தி ரூ.60 லட்சத்துக்கு ஏலம்



ஏலத்திற்காக அடுக்கி வைக்கப்பட்டு இருந்த பருத்தி மூட்டைகளை படத்தில் காணலாம்.

நாமக்கல்லில் 3,600 மூட்டை பருத்தி ரூ.60 லட்சத்துக்கு ஏலம் போனது.
பருத்திஏலம்

நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென் னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது. இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம் பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 3,600 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.
ரூ.60லட்சத்துக்குஏலம்

இந்த பருத்தி மூட்டைகள் ரூ.60 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்து 820 முதல் ரூ.4 ஆயிரத்து 390 வரைக்கும், டி.சி.எச்.ரக பருத்தி குவிண் டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 640 முதல் ரூ.5 ஆயிரத்து 9 வரைக்கும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணா புரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.